பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ. எம். பி.

மலர்: 15] சென்னை: தை 27 (10—2—68) சனி ★ வெளியூர்: தை 28 (11—2—68) ஞாயிறு [இதழ்: 199

ஒரு மொழியினர் மீது இன்னொரு மொழியினர் ஆதிக்கம் கூடாது!

14 தேசிய மொழிகளையும் ஆட்சி மொழிகளாக்குக!

'அரசியலமைப்பு திருத்தப்படும் வரை ஆங்கிலமே நீடிக்க வேண்டும்'-- மத்திய அரசுக்குத் தமிழக ஆளுநர் உஜ்ஜல் சிங் அறிவுறுத்தல்

சென்னை, பிப். 10—

"மொழி, மக்களின் உள்ளத்தை ஈர்க்கவல்லது என்பதற்கு உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு, தக்கதொரு சான்ருக அமைந்துள்ளது; எனவே, தத்தம் மொழிகளின்பால் மக்களுக்குள்ள அன்பையும் ஆர்வத்தையும் மதித்து நடப்பதே அரசியல் நுண்ணறிவாகும்.

"பற்பல மொழிகளும் பண்பாடுகளும் நாகரிகமும் படைத்த பல்வண்ணத் திருநாடு நம் இந்தியப் பெருநாடு; வெவ்வேருன மொழிகளும், பண்பாடுகளும் ஒருமித்துத் தழைத்து அவற்றின் முழுத் திறனையும் எய்துவதற்கேற்ற சூழ்நிலையைத் தோற்றுவித்தல் வேண்டும்.

"ஒரு மொழித் தொகுதியினர்க்குள்ள உரிமைகளும் வாய்ப்புகளும், தங்களுக்கும் உள்ளன என்ற எண்ணமும், தாங்களும் இந்நாட்டின் பொதுச்செயல்களை உருவாக்குவதில் தங்கள் முழுப் பங்கினையும் ஏற்கமுடியும் என்ற மனநிறைவும் மொழித் தொகுதியினர் ஒவ்வொருவருக்கும் ஏற்பட வேண்டும்.

"ஒரு மொழித் தொகுதியினர் பிற மொழித் தொகுதியினர்மீது ஆதிக்கம் செலுத்துவது தவிர்க்கப்படவேண்டும் என்ருல், தமிழையும் பிற தேசிய மொழிகளையும் மத்திய ஆட்சி மொழிகளாக ஏற்கவேண்டும்; இதற்கிணங்க, அரசியல் அமைப்பும் ஏற்ற வகையில் திருத்தப்பட வேண்டுமென்று எனது அரசு கருதுகிறது. இவ்வாறு—குறிப்பாக, அரசியல் அமைப்பு திருத்தப்படுகிற வரையில், ஆங்கிலம் மட்டுமே மத்திய ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டும்"

என்று தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் அவர்கள், இன்று சட்டமன்றக் கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார். அவர் தமது உரையில் மொழித் தொடர்பாக மேலும் குறிப்பிட்டதாவது:—

மத்திய—மாநில அரசுகளின் நிதி-அதிகார வரம்புகள்

அரசியல் சட்ட விதிகளை மறு ஆய்வு செய்ய வேண்டும்

சென்னை, பிப். 10—

"உண்மையான கூட்டாட்சி முறையில், மத்திய அரசுக்கும்—மாநில அரசுகளுக்கும் அவற்றுக்குள்ள பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு வேண்டிய நிதி வசதிகள் அவைகளுக்கு இருப்பதுடன், அரசியல் அமைப்புக்கு இணங்க, மாநிலங்களின் வரம்புக்குள் அடங்குகிற செயல்களில் மத்திய அரசு வழங்கும் விருப்பக் கடன்களும், மானியங்களும் சிறு பங்கினையே வகிக்க வேண்டும்.

மாநில மக்களின் தேவைகளைப் பெருமளவுக்கு நிறைவேற்றும் வகையில், ஆண்டுக்கு ஆண்டு இவ்விருப்பக் கடன்களும் மானியங்களும் நிலையாக உயர்ந்து வந்தன என்றதோர் ஆறுதலாவது, அண்மைக் காலம்வரையில் இருந்துவந்தது.

ஆனல், கடந்த இரண்டாண்டுகளில் இந்நிலை மாறி, மாநிலங்களுக்கு மத்திய அரசு அளிக்கும் இவ்வுதவி பெருகுவதற்கு மாருகச் சுருங்கியுள்ளது.

கடந்த காலத்தில் மத்திய அரசு வழங்கிய கடன்களையும், அவற்றிற்குரிய வட்டியையும் திருப்பித் தருவதில் மாநிலங்களின்

(4-ம் பக்கம் பார்க்க)

அடிப்படைக் குறிக்கோளுக்கு மாருக ஆட்சிமொழிச் சட்டம்

"அண்மையில் நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ள 1967-ம் ஆண்டு ஆட்சி மொழிகள் (திருத்த) சட்டம், பரந்த இந்நாட்டின் பல்வேறு தேசீய மொழிகளுக்கும் அவற்றிற்குரிய மதிப்பிடம் அளிக்கப்பட வேண்டுமென்கிற அடிப்படைக் குறிக்கோளுக்கு முரணாய் அமைந்துள்ளது!

ஆட்சி மொழிகள் (திருத்த) சட்டத்தோடு கூடவே நிறைவேற்றப்பட்டுள்ள மொழிக் கொள்கைத் தீர்மானம், பெருஞ்சுமையினை இந்தி பேசாத மக்கள்மீது மட்டும் சுமத்துவதன் வாயிலாக, குறிப்பாக அவர்களுக்குத் தீங்கு விளைவித்துள்ளது என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது:

நாடாளுமன்றம் அண்மையில் நிறைவேற்றிய மொழிக் கொள்கைத் தீர்மானத்தைச் செயல்படுத்துவதை மத்திய அரசு உடனடியாக நிறுத்திவைக்க வேண்டுமென்று எனது அரசு எடுத்துக்காட்டியதற்கிணங்க, சட்டப் பேரவை அண்மையில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இந்த மொழிச் சிக்கலை மீண்டும் ஆய்வு செய்வதற்கும், மொழித் தீர்மானத்தின் விளைவாக ஏற்பட்டிருக்கும் இன்னல்களை நீக்குவதற்கான வழிவகைகளை ஆய்வதற்கும் அரசியல் கட்சித் தலைவர்களின் உயர்மட்ட மாநாடு ஒன்றினைக் கூட்ட வேண்டுமென்று எனது அரசு வலியுறுத்தும்.

இம்மாநிலப் பள்ளிகள் அனைத்திலும் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகள் மட்டுமே கற்பிக்கப்பட வேண்டுமென்கிற இச்சட்ட மன்றப் பேரவையின் முடிவினைச் செயல்படுத்த இவ்வரசு ஏற்கனவே நடவடிக்கைகள் மேற்கொண்டுவிட்டது. மொழிச் சிக்கலில் இந்த அரசின் திட்டவட்டமான விளக்கங்களும், அவற்றிற்கு இச்சட்டமன்றப் பேரவை ஏற்பளித்த நிகழ்ச்சியும், மாணவர் சமுதாயத்தின் நலன்கள் விழிப்புடன் காக்கப்படுமென்றும், எந்தக் கிளர்ச்சியிலும் அவர்கள் ஈடுபடத் தேவையில்லை யென்றும் அவர்களுக்கு உறுதியான நம்பிக்கை அளித்திடல் வேண்டும்.

இனி மாணவர்கள் தங்கள் முழு நாட்டத்தையும் கல்வியில் செலுத்தி, நாட்டின் நல்ல குடிமக்களாவதற்குத் தங்களுக்குள்ள வாய்ப்புகளை நன்கு பயன்படுத்திக்கொள்வார்கள் என்பதில் எனக்கு ஐயப்பாடில்லை.

தனது மொழிக் கொள்கையை வகுக்கையில், கல்வித் துறையின் வல்லுநர்கள்—பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்கள் போன்ற ஆசிரியத் துறைத் தலைவர்கள் ஆகியோருடைய ஆன்ற கருத்துக்களின் பயன் அரசாங்கத்திற்குக் கிட்டியது.

பல்கலைக்கழக அளவில் தமிழ் பயிற்சி மொழியாக மாற்றப்படும் முடிவினல், இன்றைய ஆங்கிலப் பயிற்சித் திறன் குறைந்துவிடும் நிலை ஏற்பட்டுவிடுமோ என்று கவலைப்பட வேண்டிய தேவையில்லை. நமது பாடத் திட்டத்தில் ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி அரசாங்கம் முற்றிலும் உணர்ந்திருக்கிறது. இன்றைய ஆங்கிலப் பயிற்சியின் தரங்களையும் சாதனைகளையும் மேநிலைப்படுத்துவதற்காக அரசாங்கம் கல்வித் துறை வல்லுநர்களையும், பல்கலைக் கழகங்களையும் கலந்து தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

பல்வேறுபட்ட பண்பாடுகளும், வாழ்க்கை முறைகளும் கொண்ட மாநிலங்கள், தத்தமக்குரிய இடம் உறுதியாகக் காக்கப்படும்வகையிலே, உண்மையான -- கூட்டுறவுத் தன்மையுள்ள -- ஒரு கூட்டாட்சியை உருவாக்கும் பெரியதோர் சிக்கலின் பகுதியே ஒருவகையில் இம்மொழிச் சிக்கலாகும்.

எதிர்ப்புக் காட்டினும் - இனி பொறுப்புள்ளவர்களாக நடந்துகொள்வோம்!

கோவை மாணவர்களுக்கு வேண்டுகோள்

கோவை, பிப். 10—

"இந்தித் திணிப்புக் குறித்து, மாணவர்கள் தங்கள் எதிர்ப்பைப் போதுமான அளவுக்கு எடுத்துக் காட்டியாகிவிட்டது; இனி மாணவர்கள், பொறுப்புள்ளவர்களாக நடந்து கொள்ள வேண்டும்"

"கிளர்ச்சியை நீடிப்பதன் மூலம் சமூக விரோதச் சக்திகள் தொல்லையை ஏற்படுத்த அனுமதிக்கலாகாது"

என்று, தமிழ்நாடு மாணவர் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி (கோவை)க் குழு அமைப்பாளர் கேட்டுக் கொண்டிருக்கிருர்.

கிளர்ச்சி எதிலும் ஈடுபடாதிருக்குமாறும் அமைதியாக வகுப்புக்களுக்குச் செல்லுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்திருக்கிருர்.

மாணவர்களின் பெயரால் தொல்லையை ஏற்படுத்தும் நபர்களை அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவருமாறும், அவர் மாணவர்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

கேரள முதலமைச்சர் 'அப்பீல்' செய்வார்

கொச்சி, பிப். 9—

'நீதிமன்றத்தையும் நீதிபதிகளையும் அவமதித்தார்' என்று காரணம் காட்டி, கேரள முதலமைச்சர் நம்பூதிரிபாடு மீது தொடரப்பட்ட வழக்கில், உயர் நீதிமன்ற புல் பெஞ்சு, அவருக்கு ரூ. 1,000 அபராதம் விதித்தது—'கட்டத் தவறினல் ஒரு மாதம் வெறுங்காவல் தண்டனை அனுபவிக்க வேண்டும்' எனத் தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்யப்போவதாக அவர் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

'வேறுபாடுகளை விரோதமாக்கிக்கொள்ளக் கூடாது'

'அமைதியாக விவாதித்து நல்ல முடிவு காண்பதற்கு உதவுவீர்'

கோவை சம்பவங்கள்—அறிஞர் அண்ணு அறிக்கை

கோவையில் நடந்த சம்பவங்கள் குறித்து அண்ணு அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:—

நேற்று இரவு கோவையில் நடைபெற்ற சம்பவங்களை அறிந்து நான் மெத்த அதிர்ச்சியும் துயரமும் அடைந்தேன்; குறிப்பாக மத்திய துணையமைச்சர் திரு. இராமசாமி அவர்கள் கல்வீச்சுக்கு இலக்கானதும், தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டித் தலைவர் பேசுவதாக இருந்ததும் கோவை வ.உ.சி. பூங்காவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுமான பொதுக்கூட்டம்--கல்வீச்சின் காரணமாக--நடைபெருமல் தடைப்பட்டதும் எனக்குப் பெரிதும் வேதனையளிக்கிறது.

இத்தகு நிகழ்ச்சிகள் எனக்கு மனச்சோர்வையும் துயரத்தையும் அளிப்பதோடு, சனநாயகத்தைப் பற்றி எதிர்காலத்தில் நான் கொண்டுள்ள நம்பிக்கையையும் தளரச் செய்கின்றன.

குழப்பத்தையும் வன்முறைச் சம்பவங்களையும் உருவாக்கும் ஆர்ப்பாட்டங்களை விடுத்து, பிரச்சினைகளை அமைதிபூர்வமாக விவாதித்துப் பேசி முடிவு காண வேண்டும் என்றே நான் அன்றும் இன்றும் என்றும் வற்புறுத்தி வருகிறேன்.

மொழிப் பிரச்சினை உள்பட எந்தப் பிரச்சினையிலும் நமக்குள் ஏற்படும் கருத்து வேறுபாடுகளை ஒப்புக்கொண்டு இந்த நாட்டின் குடிமக்களாக வாழ வேண்டும். வேறுபாட்டை விரோதமாக வெளிப்படுத்துவது எவ்வகையிலும் உதவிசெய்யாது; மாருக, பிரச்சினைகளை மேலும் கடுமையாக்கி, நம்மால் தீர்த்து வைக்கப்படும் நிலையிலிருந்து நழுவிவிடும் நிலையையே உண்டாக்கும்.

தி. மு. கழகம்தான் இந்த அமளியைத் தூண்டிவிட்டதாகத் தமது அறிக்கையில் தெரிவித்துள்ள திரு. சி. சுப்பிரமணியம் அவர்களிடம் நான் விவாதத்தில் இறங்க விரும்பவில்லை; ஏனென்ருல், 'அது வெறும் வதந்தி' என்றே அவர் குறிப்பிட்டுள்ளார். வதந்தியான செய்தியை வகையாகப் பரிசிலனை செய்து பார்க்கும்போது, தி. மு. கழகத்திற்கு அதில் தொடர்பே இல்லை என்பதை அவர் உணரக்கூடும்.

இந்த மாநிலத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் வழியில்—ஆத்திர உணர்வு, அமைதிக் குலைவு, எரிச்சலூட்டுதல், குழப்பம் ஆகியவைகளைத் தடுக்கும் வழியில் சிந்திக்கவும், செயலாற்றவும் வேண்டுமென அனைவரையும் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

குடும்பக் கார்டைத் திருத்தும் போலி அதிகாரிகள்!

பொதுமக்களுக்கு எச்சரிக்கை

சென்னை, பிப். 8—

"குடும்பக் கார்டு தணிக்கை அதிகாரிகள் என்று சொல்லிக் கொண்டு பொதுமக்களிடம் உள்ள குடும்பக் கார்டுகளை ஒரு சிலர் வாங்கி, அவற்றில் திருத்தங்கள் செய்வதாக உணவுத் துறையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

"குடும்பக் கார்டு தணிக்கை அதிகாரிகள் ஒவ்வொருவருக்கும் அடையாளச் சீட்டுக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன; அவற்றைப் பொதுமக்கள் காண்பிக்கும்படி கேட்டுக் கொள்ளலாம்.

"அடையாளச் சீட்டு இல்லாமல், தணிக்கை அதிகாரிகள் என்று சொல்லிக்கொண்டு மோசடி செய்யவரும் நபர்களைப் பிடிப்பதற்கு உணவுத் துறைக்குத் துணை செய்யுமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"சந்தேகத்திற்கு இடம் ஏற்பட்டால், இவர்களைப் பற்றி உடனடியாக, சம்பந்தப்பட்ட சென்னை உணவுப் பங்கீட்டுத் துணை ஆணையர் அவர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு பொதுமக்கள் கோரப்படுகிகின்றனர்"

என்று, தமிழக அரசின் பத்திரிகைக் குறிப்பு ஒன்று கூறுகிறது.

இராஜிநாமா ஒத்திவைப்பு

இலட்சுமணபுரி, பிப். 9—

கவர்னரிடம் தமது பதவி விலகலை அளிப்பதாக இருந்த உ. பி முதலமைச்சர் சரண் சிங், துணை முதலமைச்சர் கேட்டுக்கொண்டதன்மீது, இப்போது தமது முடிவை ஒத்திவைத்துள்ளார்.

உலகிலேயே ஒருவர்!

கோலாலம்பூர், பிப் 10—

"உலகிலுள்ள தலைமை அமைச்சர்களிலேயே நான்தான் மிக்க மகிழ்ச்சியுள்ளவனாக இருக்கிறேன்; ஏனெனில், என்னுடைய நாட்டிலும் வெளிநாட்டிலும் எனக்குப் பிரச்சினைகளே இல்லை"

என்று தமது 65-வது பிறந்தநாள் விழாக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் மலேசியத் தலைமையமைச்சர் துங்கு அப்துல் ரகிமான் தெரிவித்தார்.

தி. மு. கழகத்தின் மொழிக் கொள்கைக்கு அகாலி தளம் ஆதரவு

புதுடில்லி, பிப். 8—

காலஞ்சென்ற மாஸ்டர் தாரா சிங்கின் தரப்பைச் சார்ந்த அகாலி தளம், தி. மு. கழகத்தின் மொழிக் கொள்கைக்கு தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இந்தத் தகவலை, அகாலி தளத் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கபூர் சிங் வெளியிட்டார்; அவர் குறிப்பிட்டதாவது :—

"ஆட்சிமொழி குறித்து தி. மு. கழகம் கடைபிடித்துவரும் கொள்கையை அகாலி தளமும் பின்பற்றும். ஆட்சி மொழிக் கொள்கையைப் பொறுத்தவரையில், இரண்டு கட்சிகளின் கருத்தும் ஒன்றுதான். இந்தி நாட்டின் இணைப்பு மொழியாவதை தி. மு. கழகத்தைப் போலவே அகாலி தளமும் ஏற்காது."

மேலும் நெருங்கிய ஒருமைப்பாடு!

டில்லியின் புதிய முயற்சி

இன்னமும் நெருங்கிய முறையில் தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதென்றும், இது சம்பந்தமாக அரசியல் தலைவர்கள்—கல்வித் துறையினர்—அறிவாளிகள் முதலியோரின் ஆலோசனையை நாடுவதென்றும் மத்திய அரசு முடிவு செய்திருக்கிறதாம்.

"வகுப்புவாதம்—பிரிவினைவாதம்—மொழிவெறி—வட்டாரப் பித்து முதலிய தீயசக்திகள் மீண்டும் தலைநீட்டியிருப்பதால், 'தேசிய' அளவில் பிரச்சினையைப் பரிசீலித்தாக வேண்டும்" என்று அரசு கருதுகிறதாம்!

இதற்கு முதற்படியாக, 'தேசிய ஒருமைப்பாட்டு'க் குழுவை புதுப்பித்து அமைத்துள்ளது; 1962-ல் சீனத் தாக்குதலையடுத்து தேசிய ஒருமைப்பாடு எழுச்சி கண்டது அல்லவா? அது முதல் இந்தக் குழு செயல்படாமலிருந்து வந்திருக்கிறது.

உள்துறை அமைச்சகத்தின் யோசனையின் பேரில் இந்தக் குழு 55 உறுப்பினர்கள் கொண்டதாக விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

தேசிய ஒருமைப்பாடு முயற்சியில் அரசியல் தலைவர்களின் ஒத்துழைப்பைக் கோரி தலைமையமைச்சர் ஏற்கனவே கடிதம் எழுதியிருப்பதாகக் கூறப்படுகிறது.

வாழ்க்கைச் செலவுப் புள்ளி

சனவரி 27-ந் தேதியுடன் முடிந்த வாரத்தில், சென்னை நகரில் தொழிலாளர் பிரிவினருக்கான வாழ்க்கைச்செலவு ஒரு புள்ளி குறைந்து 714-ல் நின்றது.

கீழ்பவானி விவசாயிகட்கு முக்கிய அறிவிப்பு

நாடாளுமன்ற உறுப்பினர் பி. ஏ. சாமிநாதன் நிலைமை விளக்கம்

கோபித் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் பி.ஏ. சாமிநாதன் அறிவிப்பதாவது :—

பவானிசாகர் அணையில் 7—8—68-ம் நாள்வரை உள்ள தண்ணீரின் அளவு 51 அடியாகும். ஆற்று மதகின் அளவு 15 அடியாகும்; அதற்குமேல் தண்ணீர் இருந்தால்தான் ஆற்றிலேயே தண்ணீர் வரும்.

பவானிசாகர் மெயின் வாய்க்காலின் வட்டம் 40 அடியில் உள்ளது. இந்த 40 அடிக்குமேல் குறைந்தது 5 அடி தண்ணீர் இருந்தால்தான் மெயின் வாய்க்காலில் விடமுடியும். அரசாங்கத்தின் மறு உத்தரவு வரை தினம் ஒன்றுக்கு 150 கியூசெக்ஸ் வீதம் குரங்கு பள்ளம்வரை தண்ணீர் விடப்பட்டு வருகிறது.

ஏற்கனவே காவிரிப் பாசனத்திற்காக 31--1--68 முதல் 7--2--68 காலைவரை தினமும் 9,000 கியூசெக்ஸ் வீதம் தண்ணீர் விடப்பட்டுள்ளது.

7—2—68 காலை 8-மணிக்கு மேல் ஆற்றில் அரக்கன்கோட்டை தடப்பள்ளி பாசனத்திற்காகத் தினமும் 500 கியூசெக்ஸ் வீதம் தண்ணீர் போய்க் கொண்டிருக்கிறது; இது 15—2—68-வரை விடப்படும். இதற்கு மேலும் அவசியப்பட்டால் இதை நீடிக்க வேண்டிய நிலைமையும் ஒருபக்கத்தில் தவிர்க்க இயலாத பிரச்சினையாக உள்ளது.

இந்த நிலையில், 15—2—68-ம் நாள்வரை தினமும் 500 கியூசெக்ஸ் வீதம் ஆற்றிலும், 150 கியூசெக்ஸ் வீதம் மெயின் வாய்க்காலிலும் தண்ணீர் விட்டதற்குப் பின்னால், 19—2—68-ம் நாள் அணையில் தண்ணீர் இருக்கும் அளவு 1,660 மில்லியன் கன அடியாகும். அப்போதைய நீர்மட்டம் 49.5 அடியாகும்.

கடந்த மூன்று மாதங்களில் பவானிசாகர் அணைக்கு மோயாற்றிலிருந்தும், பவானி ஆற்றிலிருந்தும் வரும் தண்ணீரின் அளவைச் சராசரியாகப் பகுத்துப்பார்த்தால், தினம் ஒன்றுக்கு 300 கியூசெக்ஸ் தண்ணீர்தான் வருகிறது; ஆனால், 7—2—68-ம் நாள்வரை ஆற்றில் 500 கியூசெக்சும், வாய்க்காலில் 150 கியூசெக்சும் ஆக 650 கியூசெக்ஸ் தண்ணீர் தினம் வெளியேறிக் கொண்டிருக்கிறது. அணைக்கு வந்து சேரும் தண்ணீரைவிடத் தினமும் 350 கியூசெக்ஸ் தண்ணீர் அதிகமாக விடப்பட்டு வருகிறது.

இந்த நிலைமையில், 15—1—68-ம் நாள் முடியும்போது அணையின் நீர்மட்டம் 49.5 அடியாகத்தான் இருக்கும். 45 அடிக்குக் கீழே அணையில் தண்ணீர் இருந்தால மெயின் வாய்க்காலுக்கேதண்ணீர் வராத நிலையில், இந்த 4½ அடி --சுமார் 500 மில்லியன் கன அடி (5,000 கியூசெக்ஸ்) தண்ணீரை மட்டும் 15—2—68-ம் நாளுக்கு மேல் விடக்கூடியநிலைமை, தவிர்க்க முடியாதிருந்தால் ஏற்படும். அப்படியே விட்டாலும், ஆற்றில் 500 கியூசெக்சும், மெயின் வாய்க்காலில் 150 கியூசெக்சும்--ஆக 650 கியூசெக்சும்விட்டால், 15-2-68-க்கு மேல் ஒரு வார காலத்திற்குத்தான் விட முடியும்; அதுவும், இந்த 300 கியூசெக்ஸ் தண்ணீர் அணைக்கு வந்துகொண்டு இருந்தால்தான் முடியும்.

சில நாட்களில் மோயாற்றிலிருந்தும், பவானி ஆற்றிலிருந்தும் 50 அல்லது 60 கியூசெக்ஸ் தண்ணீர்தான் வருகிறது. இந்த மூன்று மாதத்தின் சராசரி கணக்குத்தான் 300 கியூசெக்ஸ் ஆகிறது.

மோயாற்றில் சிங்காரா, பாங்காரா ஆகிய மின்சார உற்பத்தி நிலையங்களும், பவானி ஆற்றில் குந்தா போன்ற மின்சார நிலையங்களும் உள்ளன. மின்சாரம் எடுப்பதற்கு ஜெனரேட்டர் வேலை செய்யும்போதுதான் அணைக்குத் தண்ணீர் வருகிறது; ஜெனரேட்டர் வேலை செய்யாதபோது தண்ணீர் மிகவும் குறைந்துவிடுகிறது.

'மின்சார உற்பத்திக்குத் தண்ணீரை நிறுத்தாமல், அணைக்கு விவசாய உற்பத்திக்காகத் தண்ணீர் விட்டால் என்ன' என்று சிலர் வேண்டுமென்றே விவசாயிகளைத் தூண்டிவிட்டு பிரச்சினையைத் திசை திருப்பப் பார்க்கிறார்கள்.

ஏற்கனவே நம்முடைய மின்சாரத் தேவை பற்றுக்குறையாக உள்ளதால், கருநாடக அரசிடம் தமிழக அரசு மின்சாரம் விலைக்குப் பெற்று வருகிறது.

இந்த நிலையில், நம் மின்சார நிலையங்களை மூடிவிட்டால், நாட்டில் மின்சாரத்தை நம்பி நடைபெறும் விவசாயமும், மற்ற தொழில்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுவிடும். இந்த நிலைமைகளையெல்லாம் எண்ணிப் பார்த்தால், உங்களுக்கு உண்மை புரியும்.

ஆகவே, அரசியலில் தங்கள் செல்வாக்கு வலுப்பெற ஒரு சிலர் செய்கின்ற தவறான பிரச்சாரத்தை விவசாயப் பெருமக்கள் பொருட்படுத்த வேண்டாம். விவசாயிகளுக்கு உளப்பூர்வமாக எல்லாவகைச் சலுகைகளும் தந்து உற்பத்தியைப் பெருக்குவதில் நாட்டமுள்ள தமிழக அரசு ஒரு அடி தண்ணீரைக்கூட அணையில் வீணாகத் தேக்கி வைக்கவில்லை என்பது, இந்த விவரங்களின் மூலம் தெரியும்.

தற்போதைய ஆசை நிலைக்குப் பரிகாரமாகத் தண்ணீர் விடப்பட்டாலும், இறுதியில் பயிர் பலனுக்கு வருகிற நேரத்தில் தண்ணீர் இல்லாமல் போனால் இதையே நம்பிப் பயிரிட்ட அத்தனை விவசாயிகளும் நட்டப்பட்டு அவதிப்பட நேரிடும்.

இதனையெல்லாம் கருத்தில் கொண்டுதான், தமிழக அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

ஆகவே, மறைமுகமாகவும் தவறாகவும் தூண்டும் சிலரது அரசியல் மோசடிகளுக்கு ஆளாகாமல், தமிழக அரசுக்கு விவசாயப் பெருமக்கள் ஆதரவு தர வேண்டுகிறேன்.

மதிப்புரை

உலகத் தமிழ் மாநாடு--விழா மலர்

சென்னையில் நடந்த உலகத் தமிழ் மாநாட்டினையொட்டி வெளியிடப்பட்ட சிறப்பு மலர், எல்லா வகையிலும் சிறப்புமிக்கதாய்—இதழுக்கு இதழ் தமிழ் மணம் கமழும் வண்ண மலராய்த் திகழ்கிறது. தமிழ் நூற் களஞ்சியத்தில் புதிதாகச் சேர்க்கப்பட்ட இலக்கியப் பெட்டகமாகும் இது.

'உலகத் தமிழ் மாநாடு—விழா மலர்—சென்னை 1968' என்று பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்ட மேலட்டை முகப்பில், ஓவிய மன்னர் திரு. கே. மாதவன் அவர்களின் கைவண்ணம், கண்ணையும் கருத்தையும் ஈர்க்கிறது. எழுஞாயிற்றின் செங்கதிரொளியில் ஓர் இயற்கைக் காட்சியைப் படைத்திருக்கிறார்—எழில் வண்ண ஓவியமாக! அதில், தமிழகத்தின் குறிஞ்சி—முல்லை—மருதம்—நெய்தல் ஆகிய நால்வகை நிலப் பகுப்பையும் காட்டியுள்ள சிறப்பே சிறப்பு!

மலைக் குன்றும், அடர்ந்த மரங்களும், முல்லைக் கொடி படர்ந்த புதரும், நெல் வயலும், நீரோடையும், தாமரை பூத்த தடாகமும், கோயிற் கோபுரமும், இவற்றிற்கிடையே புள்ளிமான்களும், தோகை மயில்களும்—இத்தனையையும் இந்தப் படத்திற்குள் அடக்கிவிட்டிருக்கிறார், திரு. மாதவன்.

அட்டையை மெல்லத் திறந்தால், மடமடவென்று இதழ் விரிக்கிறது—உள்ளே ஒரு தாமரை! அந்தத் தாமரைத் தடாகத்தின் உச்சியிலே தகத்தகாய ஞாயிறு தோன்ற—அதில், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற சொற்றொடர் பளிச்சிடுகிறது!

இதையும் புரட்டி மலருக்குள்ளே வருவோம் இங்கேதான், மலர்க் குழுத் தலைவராக இருந்து மலரை உருவாக்கிய மாண்புமிகு உள்ளாட்சி அமைச்சர் திரு. முத்துசாமி அவர்கள், தமிழன்னையின் திருமுன் இரு கைகளாலும் மலரைப் படைக்கின்றார்!

அடுத்து, உலகத் தமிழ் மாநாட்டினைத் திறந்துவைத்த இந்தியக் குடியரசுத் தலைவர் மேதகு டாக்டர் ஜாகிர் உசேன் அவர்களின் திருவுருவப் படம் (முழுப் பக்கம்); —அதனையடுத்து, மாநாட்டு மலரை வெளியிட்ட தமிழக ஆளுநர் மேதகு சர்தார் உஜ்ஜல் சிங் அவர்களின் திருவுருவப் படம் (முழுப் பக்கம்);—அடுத்து உலகத தமிழ் மாநாட்டுத் தலைவரும், தமிழக முதலமைச்சருமான மாண்புமிகு பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படம் (முழுப் பக்கம்);—அடுத்த இரு பக்கங்களில் தமிழக அமைச்சர்கள் ஒன்பதின்மரின் உருவப் படங்கள் காட்சியளிக்கின்றன.

பிறகு, நுழைவாயிலுக்கு வருவோம்; இங்கே புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள், நம்மை அகமும முகமும் மலர வரவேற்று, உள்ளே இருக்கும் தமிழ் மணத்தைச் சுவைக்க அழைத்துச் செல்கிறார்!

மலருக்குள் செல்லு முன்னே இடையில் ஒரு பக்கத்தில், மலரைச் சிறந்த முறையில் உருவாக்கித் தந்தவா அனைவரும் நமக்கு அறிமுகமாகின்றனர்.

இலக்கியப் பகுதிக்குள் முதலில் நுழைவோம்; இதோ—'பொற்காலம் காண' என்ற தலைப்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் சுவை விருந்து!

இதைச் சுவைத்துவிட்டு ஏட்டைப் புரட்டினால், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனை உள்ளும் புறமும் படம் பிடித்துக் காட்டுகிறார்—நாவலர் நெடுஞ்செழியன்! அதனூடே, 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு' என்ற பாடல் வரிகளுக்கேற்ற வண்ண ஓவியம்!

அதைக் கண்டு களித்துவிட்டு மேலே சென்றால், பூம்புகார்க் காட்சிகள்—கலைஞர் கருணாநிதியின் படைப்புதான்! இதனிடையே கானல் வரி ஓவியக் காட்சியும், கொலைக்களக் காதையில் ஒரு காட்சியும், சேரன் செங்குட்டுவன்—இளங்கோ சந்திப்பும்—வண்ண ஓவியங்களில்!

அடுத்து ஏட்டைத் திருப்பினால், 'திருப்புமுனை' என்ற தலைப்பில், அமைச்சர் முத்துசாமியின் கருத்தோவியம்!

'ஆத்திசூடியின் பெருமை'யை சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானமும், மேடைத் தமிழ் பற்றி திரு. கே. சொக்கலிங்கம் ஐ ஏ.எஸ். அவர்களும் எழுதியுள்ளனர்.

'புகாரில் ஒரு நாள்' கவிதைப் போட்டியில் முதற் பரிசு பெற்ற கவிஞர் சண்முகத்தின் கவிதையும், அடுத்து, கவிஞர்கள் கருணானந்தம், ந. சகதீசன், திருமதி சௌந்தரா கைலாசம் ஆகியோரின் கவிதைகளும் இடம் பெற்றுள்ளன.

தமிழறிஞர்களான க. வெள்ளைவாரணனார், சாலை இளந்திரையன், கவிஞர் முடியரசன், மா.கி. தசரதன், புலவர் நன்னன், ஔவை நடராசன், சு. செல்லப்பன் ஆகியோர் படைக்கும் பல்சுவை விருந்தினையும் உண்டு, மொழிப் பகுதிக்குள் செல்வோம்; இங்கே முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம், டாக்டர் சி. இலக்குவனார், ச. அகத்தியலிங்கம், ந. சஞ்சீவி, நா. பார்த்தசாரதி, அ. மு. பரமசிவானந்தம், கோ. முத்துப்பிள்ளை ஆகியோரின் தேன் சுவை விருந்து கிடைக்கிறது.

கடந்த இருநூற்றுண்டுக் காலத்தில் தமிழுக்கு உயர் தொண்டாற்றி மறைந்த தமிழ்ப் பெரியார்கள் அனைவரின் திருவுருவப் படங்களையும், அவர்தம் தொண்டினையும் நமக்கு அறிமுகப்படுத்துகிறார்—திரு. இரா. முத்துக்குமாரசாமி அவர்கள்.

அடுத்து, தொல்பொருள் துறை இயக்குநர் திரு. இரா. நாகசாமி அவர்கள், தமிழ் எழுத்துக்களின் வரலாற்றை எடுத்துக் கூறுகிறார்.

செந்தமிழ் பயின்ற செருமானியர் பற்றி திரு. கி. வேங்கடசுப்பிரமணியம் செப்புகிறார்.

அடுத்து, பண்பாட்டுக்கு வருவோம்; இங்கே திருவாளர்கள் மு. ரா. பெருமாள் முதலியார், பேராசிரியர்கள் அன்பு கணபதி, க. த. திருநாவுக்கரசு, மா. கோபாலன் ஆகியோரின் கட்டுரைகளையும், பண்பாட்டினை விளக்கும் வண்ண ஓவியங்களையும் கடந்து சென்றால், பேராசிரியர் க. அன்பழகன் குறள்—அறம் பற்றிக் கூறுகிறார்; பண்பாட்டின் முன்னோடி பற்றி திரு. ஆ. க. அ. அப்துஸ் சமத் ஆராய்கிறார்.

அடுத்து, கலையை நுகர்வோம்; திருமதி சிவ அரசி, இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர், திரு வி கணபதி ஸ்தபதி, குடந்தை ப. சுந்தரேசன், வழுவூர் இராமையா பிள்ளை, ஔவை தி. க. சண்முகம், ஓவியர் அ. சீனு ஆகியோர், இசை—நாட்டிய—சிற்ப—ஓவியக் கலைகளை நமக்கு விளக்குகின்றனர்; இடையிடையே புகைப் படங்களும் பேசுகின்றன.

வரலாற்றுப் பகுதியைக் காண்போம்; இங்கு திருவாளர்கள் சி. பாலசுப்பிரமணியம், டாக்டர் மு. ஆரோக்கியசாமி, ச. திருஞானசம்பந்தன், சுப. அண்ணாமலை, டி. ஆர். இராமச்சந்திரன், அ. கி. பரந்தாமனார், சாத்தான்குளம் இராகவன், மு. சண்முகம் பிள்ளை, இரா. நடராசன், வை. நடராசன் ஆகியோர், அரும் பெரும் உண்மை வரலாற்று நிகழ்ச்சிகளையெல்லாம் எடுத்துரைக்கின்றனர்.

சமயத்தைப் பற்றி திருவாளர்கள் அ.ச. ஞானசம்பந்தம், ச. தண்டபாணி தேசிகர், ந. ரா. முருகவேள், ஔவை சு. துரைசாமி, மயிலை சீனி வேங்கடசாமி, அழகரடிகள், டி. எஸ். ஸ்ரீபால், பி. ஸ்ரீ., சி. வேங்கடசாமி, முத்து இராசாக்கண்ணனார் ஆகியோர்

(3-ம் பக்கம் பார்க்க)

உலகத் தமிழ் மாநாட்டுச் சிறப்பு

வங்க மொழிப் பேரறிஞரின் பாராட்டு

'ஆரிய நாகரிகத்துக்கு முந்தியது தமிழ் நாகரிகம்' என எடுத்துக்காட்டு

அண்மையில் சென்னையில் நடந்த உலகத் தமிழ் மாநாட்டின் சிறப்புக் குறித்து வங்கத்தைச் சேர்ந்த மொழிப் பேரறிஞரான டாக்டர் சுநீதி குமார் சட்டர்ஜி விளக்கினர்.

இங்குள்ள பாரதி தமிழ்ச் சங்க ஆண்டு விழாவில் கலந்துகொண்ட அவர், தமிழரல்லாதவர்கட்குத் தமிழ் வகுப்புக்களைத் துவக்கிவைத்துப் பேசுகையில் கூறியதாவது:—

"தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்கில் தமிழ் மக்கள் காட்டிய ஆர்வம் சொல்லில் அடங்காது.

முதல் நாளன்று தமிழ்க் கலைக் காட்சி ஊர்வலத்தில் அமைந்த காட்சிகளும், ஜோடனைகளும் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தன. கூட்டத்திற்கு வந்த மக்கள் தொகை பத்து இலட்சத்திற்கு மேற்பட்டிருக்கலாம்.

கருத்தரங்கில் எடுத்துக்கொள்ளப்பட்ட தலைப்புகளும், அவைகள் கையாளப்பட்ட முறைகளும் நவீன விஞ்ஞான ரீதியில் அமைந்திருந்தன.

நான் கருத்தரங்கில் பேச்சுக்களைப் பரிசீலனை செய்யும் குழுத் தலைவனாகப் பணியாற்றினேன். வந்திருந்த பேச்சுக்களெல்லாம் அநேகமாக நன்றாகவே அமைந்திருந்தன. மொழியியல் ஆராய்ச்சி குறிப்பாக மிகச் சிறப்பாக அமைந்தது.

என்னைப் பொறுத்தவரையில் பிற திராவிட மொழிகளிலிருந்து தமிழை முழுதும் பிரித்துவிட முடியாது; எனவே, தமிழ் மொழி ஆராய்ச்சிக் கருத்தரங்கு என்றால், அது பிற தென்னிந்திய மொழி ஆராய்ச்சிக் கருத்தரங்காகவே அமைய முடியும்.

சென்ற நூற்றாண்டின் நடுவில் ஐரோப்பியர்களால் எழுதப்பட்ட நமது இந்திய வரலாற்றில் ஆரியர்கள்தான் இந்தியாவுக்கு நாகரிகத்தை தந்தவர்கள் என்று காணப்படுகிறது; ஆனால் ஆரியனுக்கு முந்திய எகிப்திய, சுமேரிய நாகரிகங்கள்—தமிழ்ச் சங்க இலக்கணங்கள்—சிந்து வெளி நாகரிகம்—இவை நமக்கு தெரிந்த பின்னர் இதை நாம் ஒப்புக்கொள்வதற்கில்லை."

காந்தியும் நேருவும் கூறியது நிறைவேறுமா?

புதுடில்லி, பிப். 9—

"'ஒவ்வொருவர் கண்ணிலிருந்தும் கண்ணீரைத் துடைப்போம்' என்று காந்தியடிகள் கூறியதையும், 'உலக மக்களின் கண்களில் கண்ணீர் உள்ள வரையில் இப்பணி நீடிக்கும்' என்று நேரு விளக்கியதையும் ஐ நா. வர்த்தக-வளர்ச்சி மாநாட்டில் இந்தியப் பிரதிநிதி பி ஆர். பகத் நினைவூட்டினர்.

"வளர்ச்சியுறும் பிரச்சினை, உலகில் நீண்ட காலம் இருக்கும் என்பதை அவர் வலியுறுத்தினர்.

"வெற்றி பெறும்வரை நாம் மீண்டும் மீண்டும் சந்திக்க வேண்டியிருக்கும்" என்றார் அவர்.

மொழிச் சிக்கலால் அமைச்சரவை விலகல்

மாணவர் கிளர்ச்சியின் எதிரொலி

பிரஸெல்ஸ், பி். 8—

மொழிப் பிரச்சினை காரணமாகப் பெல்ஜியத்தில் கூட்டு அமைச்சரவை இராஜினாமாச் செய்து விட்டது.

சென்ற இரண்டு ஆண்டுகளாக அமைச்சரவை பதவியில் இருந்தது.

லுவான் பல்கலைக் கழகத்தில் பிரெஞ்சு மாணவர்களுக்குப் பிரெஞ்சு மொழியில் பயிற்சி அளிக்கும் நடைமுறை நிற்க வேண்டும் என்று பிளெமிஷ் மாணவர்கள் கிளர்ச்சி செய்து கலகம் செய்தனர். சமரச முயற்சிகள் பலிக்கவில்லை. இது தொடர்பாக அமைச்சரவையில் பிளவு ஏற்பட்டது.

இந்தப் பல்கலைக்கழகம், கத்தோலிக்க பிஷப்புகளின் நிர்வாகத்தில் இருப்பது; பிஷப்புகளும் இரண்டுபட்டிருந்தனர்.

மதிப்புரை]

[2-ம் பக்கத் தொடர்ச்சி

ஆழ்ந்த கருத்துக்களை அள்ளி வழங்குகின்றனர்.

அடுத்து, 'மருத்துவம்' என்ற தலைப்பில் தமிழ் மருத்துவத்தின் தனிச் சிறப்பை விளக்கி, மருத்துவர்களான பு. மு. வேணுகோபால், ஆ. சண்முகவேலன, கி. சிதம்பரம், ஏ. தேவசகாய ஆசான் ஆகியோர் எடுத்துரைக்கின்றனர்.

இறுதியாக, ஆங்கிலத்தில் பல்வேறு தலைப்புக்களிலும் எழுதப் பெற்ற ஆராய்ச்சிக் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன; இவற்றை முறையே ஆல்பர்டைன் கௌர், ஜான் ஆர். மார், பன்மொழிப் புலவர் கா, அப்பாதுரையார், கே. கோதண்டபாணி பிள்ளை, வி. தில்லைநாயகம், தேவநேயப் பாவாணர், சேவியர் தனிநாயகம் அடிகள், டி. ஏ. எஸ். பாலகிருஷ்ணன், மீ. ப. சோமசுந்தரம், எம். சண்முக சுப்பிரமணியம் ஆகியோர் எழுதியுள்ளனர்.

இத்துணையையும் படித்துச் சுவைத்து முடிக்கும் நேரத்தில் 'இவ்வளவுதானா' என்று இறுதிப் பக்கத்தைப் புரட்டி மூட முனையும்போது, திடீரென சில உருவங்கள், படுத்திருந்து எழுவதுபோல் எழுகின்றன; அதுதான், சிலப்பதிகாரத்தின் 'வழக்குரை காதை'யின் காட்சி! அந்தக் காட்சியின் 'மாட்சியே மாட்சி! இதைக் கண்ட பிறகு பின் அட்டையை மூடவே மனம் இடங்கொடுக்கவில்லை — பார்த்துக்கொண்டே இருக்கத் தோன்றுகிறது!

நூலின் இடையிடையே தமிழரின் அகத்தையும் புறத்தையும் வியக்கும் வண்ண ஓவியங்கள் வேறு கண்ணுக்கு விருந்தளிக்கின்றன! ஓவியங்கள் வினு, கோபண்ணா, அமுதோன், சித்திரலேகா ஆகியோரின் 'கைவண்ணம்' மலருக்கு எழிலூட்டுகின்றன!

தஞ்சைப் பெரிய கோயிலில் காணப்படும் கி. பி. 11-ம் நூற்றுண்டைய புனை ஓவியத்தின் புகைப்படமும், தமிழகப் படிமக் கலையை விளக்கும் பல்வேறு காலத்திய புகைப் படங்களும், கி. பி. 1715-ல தரங்கம்பாடியில் முதன்முதலில் அச்சிட்ட விவிலிய நூலின் முதற் பக்கத்தைக் காட்டும் புகைப்படமும், பாண்டியர் காலத்துக் காசுகளின் புகைப்படங்களும், மெய்யெழுத்துக்களின் வளர்ச்சி பற்றிய அட்டவணையும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கனவாகும்.

பல்வேறு துறைகளையும் பற்றிய கட்டுரைகளைத் துறை துறையாகப் பகுத்து, ஒவ்வொரு தலைப்பின் கீழும் தொகுத்துத் தந்திருப்பது பாராட்டத்தக்கது.

'ஒரு மலருக்கா முப்பது ரூபா விலை?' என்று வியந்தவர்கள்—மலரை வாங்கிப் படித்தபின், 'இத்தனைக்கும் விலை முப்பது ரூபாதானா?' என்று வியப்பார்கள்!

இந்த மலருக்குத் தாராளமாக ரூ. 30 தரலாம் என்றாலும், ரூ. 30 கொடுத்து வாங்கக்கூடியவர்களைத் தவிர, இந்த விலையைத் தாங்கமுடியாத பலர் ஏக்கத்துடன் இருக்கக்கூடும் என்பதில் ஐயமில்லை.

பணம் கொடுத்து வாங்க முடியாதவர்கள், பொது நூலகங்களில் படிக்க வசதியாக எல்லா நூலகங்களும் இதனை வாங்கி வைக்க வகை செய்யவேண்டும்.

இந்த மலரை சொந்தத்துக்கு வாங்கி வைத்துக்கொள்ள விரும்பி—ஆனால் பண வசதியில்லாமல் ஏங்கிக்கொண்டிருக்கும் பலரையும் திருப்திப்படுத்தும் வகையில், இதே மலரை மலிவுப் பதிப்பாக வெளியிடவும் மலர்க் குழுத் தலைவர் அமைச்சர் முத்துசாமி அவர்கள் முயற்சியெடுத்துக் கொள்வார் என்று நம்புகிறோம்.

'இப்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள விலையே அடக்க விலையைவிடக் குறைவு' என்று கூறப்படுகிறது; 'இன்னும் விலையைக் குறைத்தால் மேலும் நஷ்டம் ஏற்படும்' என்பதையும் உணருகிறோம்.

ஆனாலும், எப்படியேனும் மலிவு விலையில் எல்லோருக்கும் கிடைக்கவேண்டும் என்பது தான் நமது ஆசை.

இன்னும் சற்று விலை குறைவான தாளில் அச்சியற்றி—பதிப்பிடும் பிரதிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தினால், அடக்க விலை குறையக்கூடும்; வேண்டுமானால் வண்ணப் படங்களையும், கவர்ச்சி வேலைப்பாடுகளையும் (விரியும் தாமரை மலர், எழும் பாண்டியன் அவைக்களம்) தவிர்த்தேனும் அச்சிடலாம்.

மொத்தத்தில் இம்மலர் எல்லோர் இல்லங்களையும் அணி செய்ய வேண்டும் என்பதே நமது பேரவா!

நல்ல தமிழ் நடையுடன் ஆழ்ந்த ஆராய்ச்சிக் கருத்துக்களும், தமிழுக்கும் தமிழ்நாட்டுக்கும் ஆக்கந் தரக்கூடிய ஆய்வுரைகளும் கொண்ட கட்டுரைகள் இதில் அடங்கியிருப்பதால், இதனை எல்லாக் கல்வி நிலையங்களிலும் உள்ள நூலகங்களில் இடம் பெறச் செய்வதுடன், பள்ளிப் பாட நூல்களிலும் இக்கட்டுரைகளை எடுத்தாளலாம் என்பது நமது யோசனையாகும்.

இம்மலரை இத்துணைச் சிறப்பாக உருவாக்கி அளித்த மலர்க் குழுவினருக்கு—குறிப்பாகவும் சிறப்பாகவும் மலர்க் குழுத் தலைவர் மாண்புமிகு முத்துசாமி அவர்களும், அமைப்புக் குழுத் தலைவர் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களும், உலகத் தமிழ் மாநாட்டுத் தனித் துணை அலுவலர் சு. செல்லப்பன் பி.ஏ. பி.டி. அவர்களும், உடனிருந்து உறுதுணை புரிந்த ஏனையோரும் பாராட்டுக்குரியவர்கள்.

—மா. சே.

தலைநகரில் மது விற்பனை

லைசென்சுக் கட்டணம் உயர்த்தப்படுமாம்

மது விற்பனைக்கான லைசென்சுக் கட்டணத்தைப் பலமடங்கு அதிகரிப்புச் செய்ய டில்லி நிர்வாகம் ஆலோசித்து வருகிறதாம்.

சில்லறையில் மது விற்பதற்கான லைசென்சின் கட்டணம் இப்போது ரூ. 2,000 ஆக இருந்து வருகிறது; இதை ரூ. 2 இலட்சமாக உயர்த்த டில்லி நிருவாகம் ஆலோசிக்கிறது.

இதுபோலவே, மொத்த அளவில் மது விற்பனை செய்வதற்கான லைசென்சுக் கட்டணத்தையும் உயர்த்த டில்லி நிர்வாகம் கருதுகிறது.

இந்த ஆலோசனைக்கேற்ப முடிவு எடுக்கப்படுமானால், கட்டண உயர்வு, வருகிற ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து அமுல் செய்யப்படும்.

மது விற்பனையாளர்களிடையே இது குறித்து எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

விளம்பரம்

ரூ. 275 இலட்சத்திற்கான 6 சதவிகித தமிழ்நாடு மின்கழகக் கடன்--1980

[வட்டி தருவதற்கும் முதலைத் திருப்பித் தருவதற்கும் தமிழக அரசால் உறுதியளிக்கப்பட்டுள்ளது]

இந்தியப் பொறுப்புறுதிச் சட்டப்படி, கடன் ஈட்டுப் பத்திரங்கள், டிரஸ்டி பாதுகாப்புப் பத்திரங்களாக இருக்கும்; மேலும், இன்சூரன்சுச் சட்டம், பாங்கிங் கம்பெனிகள் சட்ட நோக்கங்களுக்காக அங்கிகரிக்கப்பட்ட கடன் ஈட்டுப் பத்திரங்களாகவும் இருக்கும்.

1934 இந்திய ரிசர்வ் பாங்கிச் சட்டம் 17-(4)-(a) பிரிவின்கீழ் இந்தப் பத்திரங்கள் முன்பண நோக்கங்களுக்காக அரசுப் பத்திரங்களுக்கு இணையாகக் கருதப்படும்.

வழங்கப்படும் விலை: ரூ. 98 சதவிகிதம்

1980 பிப்ரவரி 12-ஆம் நாள் அன்று அதே சம விகிதத்தில் திரும்பப்பெறத்தக்கது.

1968 பிப்ரவரி 12-ஆம் நாள் முதல் பணமாகவோ 'காசோலை'யாகவோ தொகை பெறப்படும்; ஆனால், மொத்தம் சுமார் ரூ. 275 இலட்சம் வசூலானதும், முன்னறிவிப்பின்றி வசூல் நிறுத்தப்பட்டுவிடும். எக்காரணத்தைக் கொண்டும் 1968 பிப்ரவரி 17-ஆம் நாள் அலுவலக நேர முடிவுக்குப் பின் நீடிக்கப்பட மாட்டாது.

சென்னை, ஆமதாபாத், பம்பாய், கல்கத்தா, ஐதராபாத், கான்பூர், புது டில்லி ஆகிய இடங்களிலுள்ள ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா உள்ளூர்த் தலைமையகங்களிலும், தமிழ்நாட்டில் உள்ள அதன் எல்லாக் கிளைகளிலும், பெங்களூர்—பெங்களூர் சிட்டி கிளைகளிலும் விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

மேற்சொன்ன எல்லா அலுவலகங்களிலும், தமிழ்நாட்டிலுள்ள எல்லாக் கருவூலங்களிலும், துணைக் கருவூலங்களிலும், தமிழக மின்கழகத்தின் எல்லா அலுவலகங்களிலும் விண்ணப்பப் படிவங்களும், நிபந்தனைகள் பற்றிய விவரங்கள் அடங்கிய நகல்களும் கிடைக்கும்.

உலகப் பொருட் காட்சியில் எகிப்திய பிரமிட்!

'பின்னி'யார் அமைத்துள்ள எழிலரங்கு

சென்னையில் நடைபெற்றுவரும் உலக வர்த்தக—கைத்தொழிற் பொருட்காட்சியில், 'பின்னி' நிறுவனத்தாரால் எகிப்திய நாட்டு நாட்டு 'பிரமிட்' போன்று எழுப்பப்பட்டுள்ள அரங்கம் புதுமைக் கலை நுணுக்கத்துடன், நேர்த்தியான முறையில் காட்சியளிக்கிறது.

இந்த அரங்கை உருவாக்குவதற்கு மரம் மட்டும்தான் தேவைப்பட்டதாகக் கூறுகிறார்கள்; ஆனால், கட்டி முடிக்க ஆறு திங்கள் பிடித்தாம்!

'துணி' மூலம் பொதுமக்களிடை புகழ் பெற்றிருந்தாலும், இந்த 'பின்னி' நிறுவனத்தார், சர்க்கரை ஆலைக்கு வேண்டிய இயந்திரங்கள், மற்றும் கப்பல்களைப் பழுதுபார்த்தல், பெரிய குழாய்கள் போடுதல் போன்ற பணிகளிலும் ஈடுபட்டுள்ளனர் என்பது இந்த அரங்கத்தைக் கண்டு களிப்பவர்களுக்குத் தெரியவரும்.

நவீன நெல் உலர்த்தும் இயந்திரமும் இந்நிறுவனத்தினரால்தான் உருவாக்கப்பட்டதாம்.

ஜான் பின்னி என்பவரால் 1799-ல், சென்னையில் துவக்கப்பட்ட இந்த நிறுவனம், இன்று 25,000 தொழிலாளர்கட்கு வேலை அளிக்கும் அளவில் விரிந்து பரந்து வளர்ந்தோங்கியுள்ளது.

துணிகளைப் பொறுத்தவரையில் அந்நிறுவனத்தினர், உலக முழுமையிலும் 50 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றனர்; இதனால் இரண்டேகால் கோடி ரூபாய் அந்நியச் செலாவணி கிடைக்கிறதாம்.

இந்தியாவிலேயே முதன் முறையாக பின்னி நிறுவனத்தார்தான் தங்கள் உற்பத்திப் பொருட்களை, தங்களால் நியமிக்கப்பட்டுள்ள அதிகாரபூர்வமான விற்பனையாளர்கள்மூலம் விற்பனை செய்ய முனைந்தார்களாம். இப்பொழுது இந்திய முழுமையிலும் 6,781 சில்லறை விற்பனையாளர்கள் இருக்கிறார்கள். மேலும் அவர்கள், 'இந்திய முழுமையிலும் பின்னித் துணிகள், நாங்கள் குறிப்பிடும் ஒரே விலையில் தான் விற்பனையாகும்' என்று கூறிப் பெருமைப்பட்டுக்கொள்கிறார்கள். இன்னும் மூன்று திங்களில் கைத்தறி ஆடைகளையும் விற்பனை செய்யப்போகிறார்களாம்!

பீளமேடு அண்ணா படிப்பகம்

பீளமேடு அண்ணா படிப்பக நிர்வாகிகள் விவரம்:—தலைவர்: மு. சுந்தரம்; செயலாளர்: சு. வெங்கடேசன்; துணைச் செயலாளர்: அரங்கநாதன்; பொருளாளர்: சு. செ. அரங்கராசன்; செயற்குழுவினர்: பொ. கோவிந்தராசு, சோ. கந்தசாமி, பி. சி. தேவராசு, கோவை பாலு, நா. தாமோதரன்.

ரோஜா பாக்கு & புகையிலை

REGD. NO. ROJA

N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

ஆந்திரத்தில் இந்தி எதிர்ப்பு

ஆந்திர மாநில தி. மு. க. அறிவிப்பு

"ஆந்திர மாநிலத்தில் நடைபெறும் மாணவர் இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் ஆந்திர மாநில திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எந்தவிதமான தொடர்பும் இல்லை என்பதை ஆந்திர மாநில தி.மு. கழகத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

"ஆந்திர மாநிலத் தி.மு. கழகம் இந்தித் திணிப்பை எதிர்க்கிறது; இரு மொழித் திட்டத்தையே (ஆங்கிலம், தெலுங்கு) ஆந்திர அரசு செயல்படுத்தக் கோருகிறோம்"

என்று, ஆந்திர மாநில தி.மு.க. அமைப்பாளர் கே.ஜி. முருகேசன் அறிவிக்கிறார்.

நீண்ட பேச்சாளருக்குக் கட்டுப்பாடு!

நாடாளுமன்றத்தையும் பொது அரசியல் மேடையாகக் கருதி, சில உறுப்பினர்கள், 'வளவள' என்று பேசுவது வழக்கம்; இதற்கு முற்றுப்புள்ளி வைக்க மேற்கு ஜெர்மனி நாடாளுமன்ற நடவடிக்கை ஆலோசனைக் குழு முடிவு செய்திருக்கிறது.

இனிமேல் உறுப்பினர்கள், முன்கூட்டியே தயாரித்த உரையை கையில் வைத்துக்கொண்டு, 'வளவள'வென்று பேசக்கூடாது என்றும், எழுதிப் படிக்காமல் ஒலிபெருக்கி முன் சுருக்கமாகப் பேசவேண்டும் என்றும் முக்கியமான அரசியல் விவகாரங்களில் மட்டும் எழுதிவைத்துப் படிக்கலாம் என்றும் விதிக்கப்படும்.

திருமண அழைப்பு

பேரன்புடையீர், வணக்கம். வரும் 12—2—68 திங்கள் காலை 9-மணியளவில், சென்னை-மயிலை எட்வர்டு எலியட்ஸ் சாலையில் உள்ள ஏவி.எம். இராஜேசுவரி திருமண மண்டபத்தில்

மாண்புமிகு முதலமைச்சர்

பேரறிஞர் அண்ணா

அவர்கள் தலைமையிலும்

தந்தை

பெரியார் ஈ. வெ. ரா.

அவர்கள் முன்னிலையிலும்

எனது தலைமகன் செல்வன் :

அறச்செல்வனுக்கும்

பூ. மாம்பாக்கம் திரு. மு. பழமலை அவர்களின் மகள் செல்வி:

ப. காந்திமதிக்கும்

எனது தலைமகள் செல்வி :

மு. சித்ரமுகிக்கும்

பெண்ணாத்தூர் திரு. பெ.மு. நாராயணசாமி அவர்கள் மகன் செல்வன்:

மு. இராவணதாசுக்கும்

நிகழவிருக்கும் மணவிழாவிற்கு வருகை தந்து மணமக்களை வாழ்த்த வேண்டுகிறேன்.

அன்புள்ள

சத்தியவாணிமுத்து

(அரிசன நல-செய்தித் துறை அமைச்சர், தமிழக அரசு)

அழைப்புக் கிடைக்கப்பெறுதவர்கள் இதனையே அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்

ஏழாண்டுக்குப் பின் நாடு திரும்பினர்!

காங்கோவின் முதல் தலைமை அமைச்சர் லுமும்பா படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, தாமாகவே காங்கோ நாட்டிலிருந்து வெளியேறி கடந்த ஏழு ஆண்டுகளாகக் கெய்ரோவில் வாழ்ந்துவந்த லுமும்பாவின் மனைவி காங்கோவிலுள்ள சின்சாகா என்ற நகருக்கு வந்து சேர்ந்தார்; அவரை விமான நிலையத்தில், காங்கோவின் குடியரசுத் தலைவர் மொபுடுவினல் துவக்கப்பட்ட புரட்சி இயக்கத் தலைவர்கள் வரவேற்றனர்.

1961-ம் ஆண்டு சனவரித் திங்களில் லுமும்பா படுகொலை செய்யப்பட்டார்.

மத்திய—மாநில...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்புக்கள் பெரிதும் மிகுந்துள்ளன. இதன் விளைவாய், பொருளாதார வளர்ச்சிக்கென மத்திய அரசு மாநிலங்களுக்கு வழங்கும் நிகர உதவி, முந்திய ஆண்டுகளில் வழங்கப்பட்டு வந்ததைவிட மிகவும் குறைந்துள்ளது.

அரசியல் அமைப்பிற்கிணங்க, மாநிலங்களுக்கே உரிய தனி நிதி வசதிகள் அவைகட்குப் போதிய அளவில் இல்லை.

மத்திய அரசு மாநிலங்களுக்குச் சட்டப்படியும், மற்றப்படியும் மாற்றவேண்டிய நிதி வசதிகளின் அளவும், குறிப்பாகச் சென்ற ஈராண்டுகளில் தேவையைவிடக் குறைந்துள்ளது. இதனால், எந்தெந்தத் துறைகளின் வளர்ச்சிக்காக மாநிலங்கள் பொறுப்பேற்றுள்ளனவோ அத்துறைகளில் சீரான முன்னேற்றம் அடைய இயலவில்லை.

கடந்த பதினைந்து ஆண்டுகளின் அனுபவத்தையொட்டி, மத்திய மாநில அரசுகளுக்கிடையே இருக்கவேண்டிய நிதி வசதிகளையும், அதிகாரங்களையும் வரையறுக்கிற அரசியலமைப்பின் விதித் துறைகளை உயர் மட்ட அளவில் மறு ஆய்வு செய்தல் இன்றியமையாததென்பது எனது அரசின் உறுதியான கருத்தாகும்.''

---ஆளுநர் உரை

அந்நியக் கடனுதவி அதிகரிக்கிறது

1967 இறுதி வரையில் ரூ. 5,305.48 கோடி

இந்தியா பெற்றுள்ளது பற்றி அதிகாரபூர்வமான அறிவிப்பு

புதுடில்லி, பிப். 10—

1967-ம் ஆண்டு இறுதிவரையில், இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்காகப் பல்வேறு நாடுகளும், நிதி நிறுவனங்களும் அனுமதித்துள்ள மொத்தக் கடனுதவி ரூ. 5 305.48 கோடி (1,012.26 கோடி டாலர்) ஆகும் என அதிகாரபூர்வமான குறிப்பு ஒன்று கூறியிருக்கிறது.

ரூபாய் மதிப்புக் குறைக்கப்படுவதற்கு முன் அளிக்கப்பட்ட ரூ. 3,967.4 கோடியும் (835.05 கோடி டாலர்), ரூபாய் மதிப்புக் குறைக்கப்பட்ட பின் அளிக்கப்பட்ட ரூ. 1,329.08 கோடியும் (177.21 கோடி டாலர்) இந்த மொத்தத் தொகையில் சேர்ந்திருக்கிறது.

பி. எல். 480 ஏற்பாட்டின்கீழ் பண்டங்களாக அமெரிக்கா அளித்த உதவியும், அன்னியச் செலாவணி நிதியிலிருந்து வாங்கப்பட்ட தொகையும், மானிய உதவிகளும் இதில் சேரவில்லை.

1067 அக்டோபர்—டிசம்பரில் (காலாண்டில்) மட்டும் ரூ. 190.32 கோடிக்கு (18.71 கோடி டாலர்) அந்நிய நாடுகளுடனும், நிதி நிறுவனங்களுடனும் கடன் உடன்படிக்கைகள் கையெழுத்திடப்பட்டிருக்கின்றன.

முன்னைய ஆண்டு இதே காலாண்டில், ரூ. 97.63 கோடிக்கு (13.02 கோடி டாலர்) மட்டுமே உடன்படிக்கைகள் கையெழுத்தாகியுள்ளன என்பது நினைவுகூரத் தக்கதாகும்.

கோவையில் காங்கிரசார் கூத்து!

கோவையில் வியாழக்கிழமையன்று மாணவர்கள் ஆர்ப்பாட்டம் காரணமாக நிகழ்ந்த சம்பவங்களைச் சாக்காக வைத்து நேற்று கோவைத் தெருக்களில் காங்கிரசார் வெறியாட்டம் போட்டுத் தீர்த்திருக்கின்றனர்!

“ தெருக்களில் போகும் வண்டிகளில், ‘இந்தி வாழ்க’ என்று எழுதியும், அதைப்போன்று சொல்லும்படி வண்டியில் உள்ளவர்களைக் கட்டாயப்படுத்தியும் வன்முறையில் ஈடுபட்டனர் ''

என்று கோவையிலிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

11--2--68

சென்னை 92-வது வட்டம்

தி.மு.க. கிளையின் சார்பில் தீக்குளித்த சிவலிங்கம் — அரங்கநாதன் நான்காம் ஆண்டு நினைவு நாள் பொதுக்கூட்டம்; மாலை 7 மணிக்கு கோடம்பாக்கம் கண்ணு மேஸ்திரி திடலில்; தலைவர்: செ. கண்ணப்பன்; படத் திறப்பாளர்: அமைச்சர் மு. கருணாநிதி; பேசுவோர் காஞ்சி மணிமொழியார், மு. கோபால் எம் எல்.ஏ.,சைதை சம்பந்தம் எம்.சி., சா. கணேசன் எம்.சி., ஏ.எஸ். இராமன் எம்.சி., மா. செங்குட்டுவன், எம். குமார், சோ.கி. மூர்த்தி, க. துரை, வி.பி. அகிலன், பி.ஏ.கணபதி, இராதா.

12--2--68

சென்னை 2-வது வட்டம்

தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு இராயபுரம்—புதுமனைக் குப்பம் மைதானத்தில்; தலைவர் : எஸ். ஆர். சாண்டோ ; பேசுவோர் : பெரியார் ஈ. வெ. ரா., கி. வீரமணி எம்.ஏ., பி.எல்., டி. எம். சண்முகம், மு. வேதாசலம் எம்.எல்.ஏ., கு. இராமலிங்கம் எம்.சி., ஏ. நெடுஞ்செழியன், எம். எஸ். மணி, மு. பொ. வீரன், செ. அரசு, டி. செல்வராசு, முத்துசாமி, கே. துரைராசு.

திருவள்ளூர்

12, 13-வது வட்ட தி.மு.க. தி.மு.க. சார்பில் மாலை 6மணிக்கு இரயிலடி அருகில்; தலைவர்: பி. நாராயணன்; பேசுவோர்: ஏ.வி.பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., டி.கே. பொன்னுவேலு பி.ஏ., எஸ்.எம். துரைராசு எம்.எல்.ஏ., டி. நாகரத்தினம் பி.ஏ., பி.எல்., ஏ. கோவிந்தசாமி எம்.சி., டாக்டர் வரதன், ஜி. எத்திராசு.

13--2--68

திருவில்லிபுத்தூர்

4, 5-வது வட்ட தி.மு.க. சார்பில் இரவு 7 மணிக்கு கோட்டைத் தலைவாசலில்; தலைவர்: வி.ஏ. இராதாகிருட்டினன்; பேசுவோர்: சி. மலைக்கனி, எஸ். அனந்தப்பன் பி.ஏ.,பி.எல்., ஆர். கே. துரைநாரணன், எஸ்.டி. கோமுந்து, வை.வீ. இராகவன்.

திருமண அழைப்பு

அன்புடையீர், வணக்கம். நிகழ் பிலவங்க ஆண்டு, தைத் திங்கள் 28-ஆம் நாள் (11-2-68) ஞாயிறு காலை 9-மணியளவில்,

முதல் அமைச்சர் மாண்புமிகு

அறிஞர் அண்ணா

அவர்கள் தலைமையில்

என் முதல் மகன் செல்வன்:

திருமாவளவனுக்கும்—

காஞ்சிபுரம் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் திரு. பக்கிரிசாமி அவர்கள் மகள் செல்வி :

நாகேசுவரிக்கும்

திருவத்திபுரம் என் இல்லத்தில் நிகழவிருக்கும் திருமண விழாவுக்கு வருகை தந்து மணமக்களை வாழ்த்தியருள வேண்டுகின்றேன்.

அன்பன்

கா. கோவிந்தன்

(தமிழகச் சட்டப் பேரவைத் துணைத் தலைவர்)

படி அரிசித் திட்டம்---ஏழை எளிய மக்களுக்கு ஓர் அருட்கொடை!

மத்திய அரசு பொருளாதாரக் கொள்கைகளே பண வீக்கத்திற்குக் காரணம்

விலைவாசி ஏற்றத்தைத் தடுக்க மத்திய அரசின் உதவி அவசியம்

“ ஐந்து கோடி ரூபாய்க்குச் சற்று மேற்பட்ட செலவில் சென்னை நகரிலும், கோவையிலும், அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் நடப்பாண்டில் செயல்படுத்தப்பட்ட ‘படி அரிசித் திட்டம்’, ஏழை எளிய மக்களுக்கு ஓர் அருட்கொடையாக இருந்துவந்துள்ளது.

வெளி அங்காடிகளில் அரிசி கிடைக்கும் நிலை மேம்பாடு அடைந்து, வெளி அங்காடியில் அரிசி விலை பெருமளவிற்கு முந்தைய ஆண்டுகளைவிடக் குறைந்து, சமுதாயத்தின் ஏழை எளிய பிரிவினர்களுக்குப் பெருமளவில் துயர் தணிப்பு தந்துள்ளது.

விலைவாசிகளின் ஏற்றத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு மாநில அரசாங்கம் தனது அதிகாரத்திற்குட்பட்ட எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டபோதிலும், மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கைகளே தற்போதைய பணவீக்க நிலைக்கு முக்கியக் காரணம் என்பதை நாம் உணரவேண்டும்.

எனது கடந்த உரையில் மக்களிடையே எங்கும் பரவியுள்ள அதிருப்தியைக் கருத்தில் கொண்டு, மத்திய அரசு, விலைவாசி ஏற்றத்தை—குறிப்பாக உணவுத் தானியங்களின் விலைவாசி ஏற்றத்தைத் தடுக்கும் கொள்கையைச் செயல்படுத்துவதில் மாநிலங்களுக்குப் பெரும் அளவில் உதவி புரிய வேண்டுமென்று வலியுறுத்தியிருந்தேன். இவ்வேண்டுகோளுக்கு மத்திய அரசு செவிசாய்க்கவில்லை.

ஆயினும், உணவுத் தானியங்களின் விலைவாசிகளையும் ஏனைய இன்றியமையாப் பொருள்களின் விலைவாசிகளையும் நியாயமான அளவுகளில் நிறுத்த மாநிலங்கள் எடுத்துக்கொள்ளும் முயற்சிகளுக்கு மத்திய அரசு ஓரளவிற்காவது உதவி புரிய வேண்டுமென்று நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றேன் ''

என்று, தமிழகச் சட்டப் பேரவை—மேலவைக் கூட்டுக் கூட்டத்தில் இன்று உரையாற்றுகையில் ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் மிகவும் வேதனையுடன் குறிப்பிட்டார்.

கனடா வழங்கும் கடனும் அதிகரிக்கிறது!

இந்தியாவுக்கு ரூ 14.70-கோடி கடனுதவி அளிக்க கனடா இசைவு தந்திருக்கிறது.

இயந்திரச் சாதனங்களை வாங்க இந்தத் தொகை பயன்படுத்தப்படலாம்.

இக்கடன் தொகைக்கு வட்டி இல்லை. இந்தத் தொகையை 50 ஆண்டுகளில் திருப்பித் தரவேண்டும்.

நடப்பு ஆண்டில் கனடா இரு கடன்களை அளித்துள்ளது; ஒவ்வொன்றும் 1-கோடி கனடா டாலர் இரசாயன உரத்துக்காகவும், வளர்ச்சிப் பணிகளுக்காகவும் தரப்பட்டது.

இதுவரை கனடா சுமார் ரூ. 550 கோடி மானியமாகவும், கடனாக உதவியிருக்கிறது.

கனடாவின் உதவியினால் இந்தியா, கோதுமை—ஏனைய உணவுப் பண்டங்கள்—தொழிற்சாலைக்கான மூலப்பொருள்கள்—சாதனங்கள்—தொழில்நுட்ப உதவி ஆகியவற்றைப் பெற முடிந்துள்ளது.

சி. தமிழரசி பி.ஏ.

நிகழ்ச்சிகள்

பிப். 11: காரைக்கால்; 12: கீழச்சீவல்பட்டி; 13: மம்சாபுரம் (திருவல்லிப்புத்தூர்); 14: சுந்தரபாண்டியம்; 15, 16, 17: பாபநாசம் வட்டம்; 18: கடலூர்; 19: கரூர்; 20: திருவில்லிப்புத்தூர்; 21: தச்சநல்லூர்; 22: கோவை 26-வது வட்டம்; 23: குன்னூர்; 24 மேட்டுப்பாளையம்; 25: காலை-கொணக்கரை (நீலகிரி), கோவை, 26: சின்னதாராபுரம்; 27: சின்னக்கலையம்புத்தூர், 28: திருச்சி 28-வது வட்டம்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு; அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.